நாள்: 16.06.2026
OS. 105/2022
பெயர் சிவக்குமார்
பி.வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு 48 வயதாகிறது. நான் 1978 ம் ஆண்டு பிறந்தேன். பஞ்சாயத்து நடந்ததாக சொல்லும் தேதியில் என் வயது 37 ஆகும். இந்த வழக்கை நீலாவதி மற்றும் அவரது கணவர் தாக்கல் செய்துள்ளார்கள். கம்பத்தில் உள்ள நந்தகோபாலன் கோவிலிற்கு தெற்கு வாசலில் உள்ள வீடு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வீடு முதலில் கோபால் அவருக்கு பாத்தியம், அவர் இறந்த பின்னர் அவரது வாரிசுகள், பார்வதியம்மாள், மனைவி மாரியம்மாள், மகன் ஹரிதேவன், மகள் நீலாவதி ஆகியோருக்கு பாத்தியம். வீட்டுக்கு வடக்கு பக்கம் உள்ள இடத்தை கோபாலின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து விற்பனை செய்துள்ளார்கள். நீலாவதிக்கு உரிமை உள்ள காரணத்தினால் தான் அந்த சொத்தை விற்பனை செய்யும் போது அவரிடம் கையொப்பம் வாங்கியுள்ளார்கள்.

பஞ்சாயத்து எந்த தேதியில், எந்த இடத்தில் நடந்தது என்று என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நீலாவதிக்கு பாத்தியப்பட்ட நிலம் 1 1/2 செண்ட்க்கு சற்று கூடுதலாக நிலம் உண்டு. மேற்படி 1 1/2 செண்ட் நிலம் நீலாவதி திருமணத்திற்கு பின்பு வாங்கப்பட்டது. அந்த கிரைய சொத்தில் தான் நீலாவதியும், அவரது குடும்பத்தாருகளும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அந்த இடத்தை 5 1/2 லட்சத்திற்கு வீடு கட்டுவதற்கு ஹரிதேவன் தான் கட்டுமான பொருட்களை வாங்கி கொடுத்தார். 2019 ல் ஹரிதேவன் காலமானார். 2015 க்கு முன்னர் வீடு கட்டப்பட்டது. எந்த ஆண்டு என்று குறிப்பிட்டு தெரியாது. நீலாவதி திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். குடும்பத்தை பகைத்து திருமணம்செய்து கொண்டார். பின்னர் சேர்ந்து கொண்டார். பொதுக்கடன் எவ்வளவு இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் பொதுக்கடனை ஹரிதேவன் திருப்பி செலுத்துவதாக ஒத்துக்கொண்டார்.

நீலாவதி 2012 ல் மாரியம்மாளுக்கும், ஹரிதேவனுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை நான் படித்து பார்க்கவில்லை. நானும், முருகன், ராஜ்மோகன் மகன் முருகன் ஆகிய மூன்று பேரும் பஞ்சாயத்து பேசினோம். பஞ்சாயத்து பேசியதை எழுத்துபூர்வமாக எழுதவில்லை. பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றும், நான் 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தையும், நீலாவதி கிரையம் பெற்ற 1 1/2 நிலத்தையும், மதிப்பீடு செய்யவில்லை. வழக்கு சொத்துக்கும், நீலாவதி கிரையம் வாங்கிய சொத்து தனிப்பட்டு வாங்கிய சொத்து என்றும், அதற்கும், இந்த வழகசு சொத்திற்க்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நீலாவதி வீடுகட்ட அவர் கணவர் தான் கட்டுமான பொருட்களை வாங்கி கொடுத்தார் என்றும், ஹரிதேவன் வாங்கி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

கோபாலுக்கு, வாதி நீலாவதி நேரடி வாரிசு என்றால் சரிதான். வாதி கோபாலின் நேரடி வாரிசு என்ற நிலையில் அவர் கேட்டுள்ள பாக பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.16 17:47:19 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்